பக்கங்கள் 23+4

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆடி 13 செவ்வாய்க்கிழமை 29.07.2025 | அதிர்வு 360

## நாமலுக்குப் பிணை



அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் நீதிமன்றில் 04▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# நல்லூர் கந்தன் மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பம்

## பல்வேறு கட்டுப்பாடுகளும் விதிப்பு





(எஸ்.நிதர்ஷன்)

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

மகோற்சவ திருவிழா தொடர்ந்து 25 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

மகோற்சவ திருவிழாக்களில் 05▶

# நாமலே அடுத்த ஜனாதிபதி



## பல வெளிநாட்டுத் தூதரகங்கள் அடையாளம் கண்டுள்ளன என்று முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் கூறுகின்றார்

இலங்கையில் உள்ள பல வெளிநாட்டுத் தூதரகங்கள் நாமல் ராஜபக்ஷவை நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக அடையாளம் கண்டுள்ளன என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஒரு கட்சியாக, நாமல் ராஜபக்ஷவின் பயணம் சிறப்பாக முன்னேறி வருவதாக நாங்கள் நம்புகின்றோம். கிராமவாசிகள் ஏற்கனவே அவர் அடுத்த ஜனாதிபதியாக வருவார் என்று பேசி வருகின்றனர்.

அநுர அரசு போலியான குற்றச்சாட்டுகளின் மூலம் நாமல் ராஜபக்ஷவை சிதைக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றது.” - என்றார்.

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



## யட்டிநுவர பிரதேச சபையின்

# எதிர்க்கட்சித் தலைவர், மனைவி, மகள் மூவரும் வீட்டிலிருந்து சடலங்களாக மீட்பு!

கண்டி மாவட்டம், யட்டிநுவர பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் (ஐக்கிய மக்கள் சக்தி) சம்பிக விஜேரத்ன (வயது – 53), அவரது மனைவி (வயது – 44) மற்றும் மூத்த மகள் (வயது – 16) ஆகியோர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

பேராதனைப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமையவே அவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

வீட்டுக்குள் வெவ்வேறான இடங்களிலேயே சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஆணின் சடலம் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

இளைய மகள் உயிர் தப்பியுள்ளார் எனத் தெரியவருகின்றது.

இவர்கள் தற்கொலை செய்து கொண்டனரா அல்லது இது கொலைச் சம்பவமா என்ற கோணத்தில் பேராதனைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# சகோதரியுடன் வசித்து வந்த சகோதரன் ஒருவர் கொலை!

## யாழ்ப்பாணத்தில் பரபரப்பு




யாழ்ப்பாணத்தில் சகோதரியுடன் வசித்து வந்த சகோதரன் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் – 1ஆம் குறுக்குத் தெரு, மணியம் தோட்டம் பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய வைரமுத்து சாந்தலிங்கம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிய வருகையில்,

மேற்படி நபரும் 56 வயதுடைய சகோதரியும் சம்பவம் இடம்பெற்ற வீட்டில் வசித்து வந்துள்ளனர். இவ்வாறான சூழ்நிலையில் அவர் கொலை செய்யப்பட்ட நிலையில் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் உயிரிழந்தவரது சகோதரி வழங்கிய வாக்குமூலத்தில்,

“நான் குறி சொல்லும் வேலை செய்து வருகின்றேன். இரவு மூவர் வீட்டுக்கு வந்து தண்ணீர் கேட்டனர். அவர்களுக்குத் தண்ணீர் எடுப்பதற்காக உள்ளே சென்ற வேளை அவர்கள் உள்ளே வந்து என்னைக் கட்டிப் போட்டு விட்டு நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

பின்னர் அதிகாலை 3 மணியளவில் நான் கட்டை அவிழ்த்துவிட்டு வெளியே வந்து பார்த்த வேளை தம்பி சடலமாகக் காணப்பட்டார்.” – என்று கூறியுள்ளார்.

இருப்பினும் மேற்படி பெண் வழங்கிய வாக்குமூலத்தில் திருப்தியடையாத பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்:

# எந்தத் தடை வரினும் நீதி நிலைநாட்டப்படும்

### பிரதமர் ஹரிணி உறுதி



“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் எதுவும் மறைக்கப்படாது. எந்தத் தடைகள் வந்தாலும் விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.”

– இவ்வாறு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் குறித்து கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“எம்மால் முன்னெடுக்கப்படும் விசாரணையை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஏற்கின்றனரா? இல்லையா? என்பது எமக்குப் பிரச்சினை இல்லை. ஏற்பதற்கும், நிராகரிப்பதற்கும் அவர்களுக்கு உரிமை உள்ளது.

அந்த உரிமையை நாம் மதிக்கின்றோம். எனினும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். இது தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். எந்தத் தடைகள் வந்தாலும் விசாரணைகள் தொடரும்.” – என்றார்.

# தங்க முலாம் பூசப்பட்ட துப்பாக்கி வழக்கிலிருந்து துமிந்த விடுவிப்பு





தங்க முலாம் பூசப்பட்ட ரி – 56 துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்ட வழக்கில் இருந்து முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க விடுவிக்கப்பட்டார்.

அவருக்கு எதிராகப் போதிய ஆதாரங்கள் இல்லை என்று கூறி கல்கிஸை நீதிவான் நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்தது.

பல வாரங்கள் தடுப்புக் காவலில் இருந்த பின்னர் கடந்த வாரம் அவருக்குப் பிணை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்

# பிரியந்த ஜயக்கொடிக்கு ஓகஸ்ட் 6 வரை மறியல்



முன்னாள்சிரேஷ்டபிரதிப்பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜயக்கொடி எதிர்வரும் ஓகஸ்ட் 6 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மஹர நீதிவானால் இதற்கான உத்தரவு இன்று பிறப்பிக்கப்பட்டது.

திட்டமிட்ட குற்றக் கும்பல் உறுப்பினரான கெஹெல்பத்தர பத்மே என்பவரால் தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகப் பொய்யான முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்த குற்றத்துக்காக அவர் நேற்று குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து, உடல் நலக்குறைவு காரணமாக ராகம வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**நாமலுக்குப் பிணை...**

ஆஜரானதையடுத்துப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

2017 ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்பனை செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் அநாகரிகமாக நடந்து கொண்ட குற்றத்துக்காக நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டுப் பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை மீண்டும் அழைக்கப்பட்ட போது, நாமல் ராஜபக்ஷ நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்தார்.

இதனால் அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றம் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராகப் பிடியாணை உத்தரவு பிறப்பித்திருந்தது.

ஆனால், நாமல் ராஜபக்ஷ நேற்று காலை திருமண நிகழ்வொன்றில் பங்கேற்பதற்காக மாலைதீவுக்குச் சென்றிருந்தமையால் இன்று மீண்டும் நாடு திரும்பி பிடியாணை உத்தரவுக்கு எதிராக மனுத் தாக்கல் செய்து அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜரானதையடுத்துப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.




# நல்லூர் கந்தன் மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பம்










(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஞ்சள் திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் 7ஆம் திகதியும் , மாம்பழத் திருவிழா ஓகஸ்ட்19ஆம் திகதியும், சப்பரத் திருவிழா ஓகஸ்ட் 20ஆம் திகதியும், தேர்த் திருவிழா ஓகஸ்ட் 21ஆம் திகதியும், தீர்த்தத் திருவிழா ஓகஸ்ட் 22ஆம் திகதி காலை இடம்பெற்று , மாலை கொடியிறக்கம் இடம்பெற்று மகோற்சவம் நிறைவுபெறும்.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மகோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாநகர சபையால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களின்படி, எதிர்வரும் ஓகஸ்ட் 24ஆம் திகதி வரையில் ஆலய சுற்றுவீதிகளில் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், ஆலயத்துக்கு நேர்த்திக் கடன்களைக்கழிப்தற்காகவருகின்றதூக்கு காவடிகள் அனைத்தும் ஆலயத்தின் முன்பக்க பருத்தித்துறை வீதி வழியாக மட்டுமே உள்நுழைய முடியும். அவ்வாறு வருகின்ற காவடிகள் இறக்கப்பட்டதும், வாகனங்கள் அனைத்தும், செட்டித் தெரு வீதி வழியாக வெளியேறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஆலய வீதித் தடைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கும் வழமை போல் மாநகர சபையால் வாகன அனுமதி அட்டை வழங்கப்படும். நிரந்தர தற்காலிக வியாபாரிகளுக்குப் பொருட்களை ஏற்றி இறக்க விசேட நேரக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

உற்சவ காலங்களில் சிறுவர்களைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. ஆலய வெளிவீதி சூழலில் வியாபார, விளம்பர மற்றும் ஒளிபரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.

உற்சவ காலங்களில் ஆலயச் சூழலில் பக்தி கீதங்களை மாத்திரமே ஒலிபரப்புச் செய்ய முடியும்.உற்சவ காலங்களில் விநியோகிக்கப்படும் விளம்பரங்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்களில் கடவுளின் உருவப்படங்கள் பிரசுரிப்பது தவிர்க்கப்பட்டுள்ளது.

உற்சவ காலத்தில் ட்ரோன் கமராக்களைப் பயன்படுத்தி காணொளி பதிவு செய்தல், வானூர்தியைப் பயன்படுத்தி பூ சொரிதல் மற்றும் வான வேடிக்கை நிகழ்வுகளைச் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது. உற்சவ காலங்களில் ஆலய வெளிச் சூழலில் காலணிகளுடன் நடமாடுவது தவிர்க்கப்பட்டுள்ளது.




# மல்லாவி இளைஞரின் படுகொலைக்கு நீதி கோரி இன்று பெரும் போராட்டம்!

(பா.சதீசன்)

கனடா செல்லத் தயாரான நிலையில் கடந்த 29.07.2024 அன்று காணாமல்போன நிலையில் மல்லாவி, வவுனிக்குளம் பகுதியிலிருந்து மறுநாள் சடலமாக மீட்கப்பட்ட மல்லாவி, யோகபுரம் பகுதியைச் சேர்ந்த ஆனந்தராசன் சஜீவன் என்ற இளைஞரின் மரணத்துக்கு நீதி கோரி மல்லாவி பகுதியில் பொதுமக்கள், பொது அமைப்பினர் மற்றும் வர்த்தக சங்கத்தினர் இணைந்து பாரிய அளவிலான கவனவீர்ப்புப் போராட்டத்தை இன்று காலை மேற்கொண்டிருந்தன

ஒரு வருடமாகியும் மேற்படி இளைஞரின் படுகொலைக்குக் காரணமானவர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்பதுடன், பொலிஸாரின் விசாரணைகள் மந்தகதியில் நடப்பதாகக் கூறியும், துரித கதியில் விசாரணைகளை முன்னெடுத்துக் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்றும் கூறியே பொது மக்கள் மற்றும் பொது அமைப்புக்களினால் இன்று இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மல்லாவி மத்திய பஸ் நிலையத்தில் ஆரம்பமாகிய பேரணி நடை பவனியாக மல்லாவி பொலிஸ் நிலையம் வரை சென்றது.

பின்னர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஒன்றுகூடி ,

சஜீவன் மரணத்திற்கு நீதி வேண்டும், கொலையாளிகளை நீதியின் முன் நிறுத்து, விசாரணைகளைத் துரிதப் படுத்தி நீதியைப் பெற்றுத் தா, எமது நண்பனின் மரணத்திற்கு நீதி வேண்டும், வஞ்சகரின் சூழ்ச்சிக்கு முடிவில்லையா, எமது பிள்ளைக்கு நீதி வேண்டும் போன்ற பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

இதேவேளை, இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக இன்று மல்லாவி பகுதியில் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மல்லாவி பொலிஸ் நிலையம் முன்பு ஒன்றுகூடிய வேளை சம்பவ இடத்திற்கு வருகை தந்த புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, மல்லாவி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விடுப்பில் சென்றுள்ளதாகவும், இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும், இளைஞரின் படுகொலைக்கான நீதியைத் தான் பெற்றுத் தருவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களிடம் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பான வழக்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குறித்த காலப் பகுதிக்குள் துரித கதியில் விசாரணைகளை முன்னெடுத்துக் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தாவிடின் பாரியளவிலான போராட்டத்தைத் தாம் மேற்கொள்வோம் என்று எச்சரித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர். அங்கு வருகை தந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

இதேவேளை, எதிர்வரும் நாடாளுமன்ற நேரத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் இது தொடர்பில் தான் கேள்வி எழுப்பவுள்ளதாகவும் ரவிகரன் எம்.பி. தெரிவித்தார்.














# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஒப்பந்தத்துக்கு வயது - 38

பிரிட்டனிடமிருந்து - காலனித்துவ ஆட்சியிடமிருந்து - இலங்கை சுதந்திரம் பெற்றதாக அறிவிக்கப்பட்ட பின்னர், நான்கு தசாப்த காலமாக நீடித்த இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காண்பது என்ற பெயரில் - இலங்கைத் தமிழர்களுக்கு நீதியான அரசியல் இணக்கப்பாடு ஒன்றை வழங்குவது என்ற நாமத்தில் - 1987இல் இதே ஜூலை 29 ஆம் திகதியில் இலங்கை - இந்தியா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் கொழும்பில் இந்த சர்வதேச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். ஈழத் தமிழர்களுக்காக, இலங்கை மீது அதீத அழுத்தம் கொடுத்து, இந்த ஒப்பந்தத்தைச் செய்ததாக இந்திய வெளிப்படுத்திக் கொண்டாலும், மறுபுறத்தில் ஈழத் தமிழர்களின் நலனிலும் விட இந்தியாவின் பூகோள அல்லது புவியியல் சார் நலன், பாதுகாப்பு, வசதி, தாற்பரியம் ஆகியவற்றை இலக்கு வைத்து, அவற்றை முன்னிறுத்தியே இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டதாக ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஈழத் தமிழர்களின் அரசியல் அபிலாசைக்கான விடுதலைப் போராட்டத்தை அடியோடு சீர்குலைத்தது இந்தியா.

இந்த ஒப்பந்தத்தில் காணப்பட்ட இணக்கங்களை நடைமுறைப்படுத்துவது என்ற ஏற்பாட்டில்தான் இங்கு 13ஆவது அரசமைப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதன் கீழ் மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டது.

இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்கள் தனியான தேசிய இனம் என்பதும், வடக்கும் கிழக்கும் அவர்களது பூர்வீகத் தாயகம் என்பதும் இந்த சர்வதேச ஒப்பந்தத்தினால் கொழும்பு அரசு ஏற்றுக் கொண்டது என்ற வகையில் இது தமிழர்களைப் பொறுத்தவரை ஒரு திருப்பு முனை விடயம் என்பதை மறுப்பதற்கு இல்லை.

ஆனால், ஈழத் தமிழர்களுடைய ஆயுதப் போராட்டத்தை தன்னுடைய வலிமை மூலம் அடக்கி, அதற்கு மாற்றீடாகத் தானும் சேர்ந்து முன்மொழிந்த இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளையோ, அதன் கீழான இணக்கங்களையோ, முறையாகப் பேணச் செய்வதிலும், நடைமுறைப்படுத்த வைப்பதிலும் இந்தியா அசிரத்தையாகவும். பொறுப்பின்றியும், மோசமாகவும் நடந்து கொண்டதன் மூலம், ஈழத் தமிழர்களின் வாழ்வியல் ஆன்மாவில் பெரும் காயத்தை ஏற்படுத்தி நிற்கின்றது.

புதுடில்லி ஆட்சி நிர்வாகம் இப்படி நடந்து கொள்ளும் என்பதை அப்போதே முன்னெச்சரிக்கையுடன் அறிவித்து, அந்தப் போக்கை எதிர்த்து நின்ற விடுதலை புலிகளின் நிலைப்பாடு - தீர்க்க தரிசனம் - முற்றிலும் சரி என்பதை இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தச் செய்வதில் தனக்குள்ள கடப்பாட்டைத் துறந்து, விட்டேத்தியாக - நடந்து கொண்ட புதுடில்லி ஆட்சி பீடம், அதன் மூலம் உறுதிப்படுத்தி நிற்கின்றது. அதுவே தமிழர்களின் வேதனையும் துரதிஷ்டமுமாகும்.

ஈழத் தமிழர்கள் தங்கள் போராட்டத்தை தாங்களே முன்னெடுப்பதற்கு இடம் அளிக்காமல், இடையில் குறுக்கில் புகுந்து, ஈழத் தமிழர்களின் பெயரில் தனது புவியியல் நலன்களை முன்னிறுத்த முயன்ற இந்தியா, இன்று ஈழத் தமிழர்களையும் நட்டாற்றில் விட்டு, தனது நலன்களையும் கொழும்பிடம் அடகு வைத்து, பறிகொடுத்து, இரண்டும் கெட்டான் நிலையில் நிற்பது அப்பட்டமானது.

இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தை எதிர்த்ததால் ஒரு சிறுபான்மை இனமான இலங்கைத் தமிழர்கள் இன்று அவலப் படுகின்றார்கள் என்பதிலும் பார்க்க, ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை வைத்து தன்னுடைய பிராந்திய அரசியல் காய் நகர்த்தலை முன்னெடுத்த இந்தியா, ஈழத் தமிழர்களை கைவிட்டு தன்னுடைய புவியியல் சார் நலன்களையும் பறிகொடுத்து, அந்தரித்து நிற்கின்றது என்பதே கவனிக்கப்பட வேண்டியதாகும்.

ஈழத் தமிழர்களின் நலனைக் கால் வாரியதால் இந்தியாவும், அல்லது இந்திய நலனைக் கால் வாரியதால் ஈழத் தமிழர்களும் இன்று அந்தரத்தில் - அவஸ்தையில் - நிற்கின்றார்கள் என்பதுதான் இப்போதைய பெறுபேற்று நிலைமை.



# முன்னேஸ்வரம் முத்துமாரியம்மன் ஆடிப்பூரம்

**(உடப்பு க.மகாதேவன்)**

அம்மன் ஆலயங்களில் ஆடி மாதத்தில் இடம்பெறும் மிக முக்கிய மான திருவிழாக்களில் ஆடிப்பூரம் சிறந்த இடத்தை வகிக்கின்றது.

இதன் போது அம்மனுக்கு அபிஷே கம், ஆராதனைகள், அர்ச்சனைத் தட்டுகள் வழங்குதல், ஆரார்த்தி எடுத் தல், பெண்களுக்கு திருமாங்கல்ய குங்குமம் வைத்தல் போன்றவை சிறப்பாக நடைபெறுவதுண்டு.

அதன்படி முன்னேஸ்வரம் ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயத்தில் நேற்று (28) திங்கட்கிழமை ஆடிப்பூர நிகழ்வுகள் இடம்பெற்றன.







# பூரணை தினத்தில் தனியார் வகுப்பு நடத்த முற்றாகத் தடை

## மட்டு. மாநகர சபையின் தீர்மானம் நிறைவேற்றம்








**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

தனியார் கல்வி நிறுவனங்களுடனான விசேட ஆலோசனைக் கலந்துரையாடல் ஒன்று மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் கல்விச் சேவையை வழங்கிவரும் தனியார் கல்வி நிறுவனங்களுடனான விசேட ஆலோசனைக் கலந்துரையாடலானது, மாநகர சபை முதல்வர் சிவம் பாக்கியநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு ஆன்மீக அதிதிகளாக ராமகிருஸ்ண மிஷனின் மட்டக்களப்பு கிளையின் பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் உள்ளிட்ட மதத் தலைவர்கள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினர். ஆலோசனையையும் வழங்கியிருந்தனர்.

இதன்போது ஞாயிறு மற்றும் பூரணை தினங்களில் தனியார் கல்வி நிலையங்களின் கல்விச் செயற்பாட்டை நிறுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. இவ்வாறான கல்விச் செயற்பாடுகளால் மாணவர்களுக்கு ஏற்படும் உல நல பாதிப்பு, மாணவர்களிடையே காணப்படும் போட்டித் தன்மையினால் ஏற்படும் விளைவுகள் தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் பிரதி முதல்வர் வைரமுத்து தினேஸ்குமார், மட்டக்களப்பு மாநகர சபையின் உறுப்பினர்கள், மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் என்.தனஞ்ஜெயன், மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி, உள நல வைத்திய நிபுணர் வைத்தியர் கடம்பநாதன் உள்ளிட்ட தனியார் கல்வி நிறுவனங்களின் நிருவாகிகள், ஆசிரியர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது இறுதி தீர்மானமாக ஞாயிற்றுக்கிழமைகளில் தரம் ஒன்று தொடக்கம் தரம் 10 வரையான மாணவர்களிற்கு எந்தவித பிரத்தியேக வகுப்புக்களும் நடத்த கூடாது எனவும், பௌர்ணமி தினங்களில் எந்தவொரு வகுப்புக்களும் நடத்த முடியாது எனவும் முடிவு எட்டப்பட்டு முதல்வரால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.







# சாவகச்சேரி நகரசபையின் உப தவிசாளர் கௌரவிப்பு!

**(த.சுபேசன்)**

சாவகச்சேரி நகர இளைஞர் கழகத்தின் தலைவராக இருந்து தற்போது சாவகச்சேரி நகர சபையின் உபதவிசாளராகத் தெரிவாகியிருக்கும் ஞா.கிஷேநரை சாவகச்சேரி நகர இளைஞர் கழகம் கௌரவித்துள்ளது.

அதேநேரம் கழகத்தின் செயலாளராக பதவி வகித்து தற்போது நகரசபை உறுப்பினராக தெரிவாகியுள்ள மு.கோகுல்ராஜும் இதன்போது கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.








# ‘மட்டு. முயற்சியாண்மை 2025’ கண்காட்சியும் விற்பனையும்!

## மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் முன்னெடுப்பு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட உள்ளூர் உற்பத்தியாளர்களின் பிரதேச மட்ட சுய தொழில் முயற்சியாலர்களின் உற்பத்தி பொருள்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக இன்று மண்மனை வடக்கு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் பிரதேச வளாகத்தில் நேற்று (28) இடம்பெற்றது.

பிரதேச செயலகத்தின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் “மட்டு. முயற்சியாண்மை” எனும் கண்காட்சியும் விற்பனையும் முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் கண்காட்சியில் ஏராளமான பொது மக்கள் விற்பனை கண்காட்சியை பார்வையிட வந்தனர்.பொருள்களையும் ஆர்வத்துடன் கொள்வனவு செய்தனர்.

இந்தப் பிரதேச சிறு தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்துவதற்கு பிரதேச செயலகத்தினால் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னேடுத்து வருகிறமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர்களான திருமதி சுபா சதாகரன், திருமதி லக்சன்யா பிரசந்தன், கணக்காளர், நிருவாக உத்தியோகத்தர், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.







# பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் பிரான்ஸ்: பட்டினிக் கொடுமையில் வாடும் காசா!

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா -**

140 இற்கும் மேற்பட்ட நாடுகள் இப்போது பாலஸ்தீனர்களுக்கு தனி அரசை அங்கீகரித்துள்ளன. பாலஸ்தீனத்தை தற்போது அங்கீகரித்த ஐரோப்பிய நாடான பிரான்ஸ் உள்ளிட்ட மேலும் பல நாடுகள் பாலஸ்தீன தனி அரசை அங்கீகரித்து வருகின்றன.

பாலஸ்தீனத்தை அங்கீகரித்த முதல் ஜி 7 நாடாக பிரான்ஸ் மாறியுள்ளது. ஐரோப்பாவில் மிகப்பெரிய மற்றும் வேகமாக வளர்ந்து வரும் முஸ்லிம் மக்கள் தொகையை பிரான்ஸ் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### முதல் ஜி7 நாட்டின் பாலஸ்தீன அங்கீகாரம்!

மக்கள் தொகை மாறும்போது, உள்நாட்டு அரசியல் மாறும் போது, சர்வதேச உறவுகளும் மாறுகின்றன. இஸ்ரேல் அரசும் பாலஸ்தீன மக்களுக்கு எதிராக, காசா பெண்களையும் குழந்தைகளையும் பலியிடுவதே போரின் முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது. இதன் விளைவே பிரான்ஸ் பாலஸ்தீன தனி அரசை அமைப்பது என்பதுல் திடமாக உள்ளது.

பிரான்சுக்குப் பிறகு, ஐரோப்பாவில் அதிக முஸ்லிம் மக்கள் தொகை கொண்ட அடுத்த இரண்டு நாடுகள் இங்கிலாந்து மற்றும் ஜெர்மனி ஆகும். எனவே பாலஸ்தீனத்தை அங்கீகரித்த அடுத்த பெரிய மேற்கத்திய நாடு இங்கிலாந்து ஆகும். குறிப்பாக அது இப்போது ஒரு இடதுசாரி அரசாங்கத்தைக் கொண்டிருப்பதால் பாலஸ்தீன ஆதரவு நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது.

இஸ்ரேலுக்கு எதிராக உலகளாவிய பொதுக் கருத்தைத் திருப்ப காசாவில் பெண்களையும் குழந்தைகளையும் பலியிடும் கோரம் உலகின் மனச்சாட்சியை தட்டி எழுப்பியுள்ளது.

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், பாலஸ்தீன அரசை ஜூலை 25 அதிகாரப்பூர்வமாக அங்கீகரிப்பதாக அறிவித்துள்ளார்.

அதேசமயம் பாலஸ்தீன அரசை அதிகாரப்பூர்வமாக அங்கீகரிப்பது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு செப்டம்பரில் வெளியிடப்படும் என்றும்,

தொடர்ச்சி▼






# பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் பிரான்ஸ்: பட்டினிக் கொடுமையில் வாடும் காசா!

தொடர்ச்சி▲

நியூயார்க்கில் நடைபெறும் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் முறையான அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

காசா பகுதியில் போரை முடிவுக்குக் கொண்டு வந்து பொதுமக்களைக் காப்பாற்றுவது அவசர மானது என்றும், உடனடியாக போர் நிறுத்தம் எட்டப்பட வேண்டும், அமைதி ஏற்படுத்தப்பட வேண்டும், அனைத்து பணயக் கைதிகளும் விடு விக்கப்பட வேண்டும் என்றும் பிரான்ஸ் ஜனாதிபதி கூறியுள்ளார். காசா மக்களுக்கு தற்போது பாரிய மனிதாபிமான உதவியே உடனடியாக தேவைப் படுவதாகவும் பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவித்துள் ளார்.

### பட்டினியால் வாடும் காசா

இஸ்ரேலிய குண்டுவீச்சில் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் சிக்கி பட்டினியால் வாடும் காசாவில் மனிதாபிமான நெருக்கடி குறித்து சர்வ தேச அளவில் சீற்றம் அதிகரித்து வரும் நிலையில் மக்ரோனின் இந்த அறிக்கை வந்துள்ளது.

இன்றைய அவசர விஷயம் என்னவென் றால், காசாவில் போர் நின்று பொதுமக்கள் காப்பாற்றப்பட வேண்டும், அமைதி சாத்தியம் என்று மக்ரோன் கூறினார். மத்திய கிழக்கில் ஒரு நீதியான மற்றும் நீடித்த அமைதிக்கான அதன் வரலாற்று உறுதிப்பாட்டிற்கு உண்மையாக, பிரான்ஸ் பாலஸ் தீன அரசை அங்கீகரிக்கும் என்று நான் முடிவு செய்துள்ளேன் என்றும் மக்ரோன் அறிவித்தார்.

உடனடி போர்நிறுத்தம், பணயக் கைதிகளை விடுவித்தல், மனிதாபிமான உதவிகளில் அதி கரிப்பு, இறுதியில், இராணுவ மயமற்ற பாலஸ் தீனம் மற்றும் இஸ்ரேலுக்கான பாதுகாப்பான எல்லைகளை உள்ளடக்கிய இரு-மாநில தீர்வு என பலதரப்பட்ட தொலைநோக்குப் பார்வையை மக்ரோன் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

சமாதானம் சாத்தியம் என்பதை நிரூபிக்க வேண்டியது பிரெஞ்சுக்காரர்களான நாமும், இஸ்ரேலியர்கள், பாலஸ்தீனியர்கள் மற்றும் நமது ஐரோப்பிய மற்றும் சர்வதேச பங்காளி களும் சேர்ந்துதான் பங்கேற்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

### பிரான்ஸ் அறிவிப்புக்கு இஸ்ரேலிய எதிர்வினை

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பிரான்சின் முடிவை வெளிப்படையாக நிரா கரித்தார். இது ஆபத்தானது மற்றும் தவறா னது என்றும் கூறியுள்ளார். அக்டோபர் ஏழு படு கொலைக்குப் பிறகு பாலஸ்தீன அரசை அங்கீ கரிப்பது பயங்கரவாதத்திற்கு வெகுமதி அளிக் கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்தகைய அரசு மற்றொரு ஈரானிய பினாமி யாக மாறக்கூடும் என்று நெதன்யாகு எச்சரித்-தார். மேலும் பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலுடன் இணைந்து அமைதியை நாடவில்லை - அவர்கள் அதன் அழிவை நாடுகிறார்கள் என்றும் தெரிவித் தார். எனினும், பிரான்சின் நடவடிக்கைக்கு பாலஸ் தீனத் தலைவர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். பாலஸ்தீன ஆணையம் மக்ரோனின் அறிவிப்பை வரவேற்றுள்ளது.

இருப்பினும், பிரான்சின் முடிவை அமெரிக்கா கடுமையாக நிராகரித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

### அடையாளபூர்வ அங்கீகாரமா?

1967 மத்திய கிழக்குப் போரின் போது இஸ்ரேல் கைப்பற்றிய மேற்குக் கரை, கிழக்கு ஜெருசலேம் மற்றும் காசா ஆகிய பகுதிகளில் ஒரு சுதந்திர அரசை உருவாக்க பாலஸ்தீனியர்கள் பல தசாப் தங்களாக முயன்று வருகின்றனர்.

இஸ்ரேலின் அரசும், அதன் பெரும்பாலான அரசியல் வர்க்கமும் நீண்ட காலமாக பாலஸ்தீன அரசை எதிர்த்து வருகின்றன.

பாலஸ்தீனிய அரசை அங்கீகரிப்பதற்கான முடிவு பெரும்பாலும் அடையாளப்பூர்வமானது. ஏனெ னில் பாலஸ்தீனியர்கள் தங்கள் சொந்த அரசை உருவாக்க விரும்பும் பிரதேசங்களை இஸ்ரேல் தொடர்ந்து ஆக்கிரமித்து வருகிறது. மேற்குக் கரை,

தொடர்ச்சி▼

# பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் பிரான்ஸ்: பட்டினிக் கொடுமையில் வாடும் காசா!

தொடர்ச்சி▲

காசா பகுதி மற்றும் கிழக்கு ஜெருசலேமை அதன் தலைநகராகக் கொண்டுள்ளது.

இது காசாவில் நடக்கும் போரால், சர்வதேச அரங்கில் இஸ்ரேலை மேலும் தனிமைப்படுத்துகிறது. இந்த வாரம் நூர்மு இயக்குனரின் கூற்றுப்படி, இஸ்ரேலிய அரசால் உருவாக்கப்பட்ட ஒரு பெரிய பஞ்சம் காசாவில் ஏற்பட்டு வருகிறது என்று அவர் கூறியுள்ளார்.

காசாவுக்குள் உதவிகளை அனுமதிப்பதாக இஸ்ரேல் கூறினாலும், அது போராளிகளின் கைகளில் சிக்குவதைத் தடுக்க அதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று அது வலியுறுத்துகிறது. போதுமான உணவை அனுமதித்ததாக இஸ்ரேல் கூறுகிறது. மேலும் காசாவின் 2.2 மில்லியன் குடியிருப்பாளர்களின் துன்பங்களுக்கு ஹமாஸைக் குறை கூறுகிறது.

### மக்ரோன் ஏன் இந்த முடிவை எடுத்தார்?

இரு நாடுகள் தீர்வு என்ற யோசனையை உயிர்ப்புடன் வைத்திருக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, மக்ரோன் பல மாதங்களாக இந்த முடிவை நோக்கி நகர்ந்து வந்தார். அடுத்த வாரம் பிரான்ஸ் மற்றும் சவுதி அரேபியா இணைந்து நடத்தும் ஐ.நா. மாநாட்டிடுக்கு முன்னதாக, இதே நடவடிக்கையை எடுக்க பரிசீலிக்கும் பிற நாடுகளையும் நம்ப வைக்கும் நோக்கில், அவர் இப்போது இந்த முடிவை எடுத்துள்ளார்.

மக்ரோனின் அறிவிப்புக்கு முன்னர், இஸ்ரேலிய அதிகாரிகள் இருதரப்பு உறவுகளுக்கு “அணு குண்டு” என்று சிலர் சொன்னார்கள். இந்த விஷயத்திற்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகையில், பிரான்சுக்கு இஸ்ரேல் அளித்த எச்சரிக்கைகளில் உளவுத்துறை ஒத்துழைப்பைக் குறைப்பதற்கான அச்சுறுத்தல்கள், பிரெஞ்சு பிராந்திய முயற்சிகளுக்கு தடைகள் கூட அடங்கும்.

### பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் அடுத்த நாடு ?

ஐரோப்பாவில் மிகப்பெரிய யூத மற்றும் முஸ்லிம் சமூகங்களைக் கொண்ட பிரான்சின் இந்த நடவடிக்கை, இதுவரை சிறிய நாடுகளால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு வந்த ஒரு இயக்கத்தை வலுப்படுத்தக்கூடும். ஆனால் இப்போது பிரிட்டன், ஜெர்மனி, ஆஸ்திரேலியா, கனடா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் இதைப் பின்பற்ற அழுத்தம் கொடுக்கும். குறுகிய காலத்தில், மால்டா மற்றும் பெல்ஜியம் ஆகியவை அடுத்த ஐரோப்பிய ஒன்றிய நாடுகளாக இந்த நடவடிக்கையை எடுக்கக்கூடும்.

கடந்த ஆண்டு, அயர்லாந்து, நோர்வே மற்றும் ஸ்பெயின் ஆகியவை 1967 போருக்கு முன்பு இருந்த எல்லைகளுடன் பாலஸ்தீன அரசை அங்கீகரித்தன, அப்போது இஸ்ரேல் மேற்குக் கரை, காசா மற்றும் கிழக்கு ஜெருசலேமை ஆக்கிரமித்தது.

இருப்பினும், இறுதி ஒப்பந்தத்திற்கான எதிர்கால பேச்சு களில் எல்லைகள் மாறக்கூடும் என்றும், அமைதி மற்றும் பாதுகாப்பில் இஸ்ரேலின் இருப்பு உரிமைக்கான ஆதரவை அவர்களின் முடிவு குறைக்காது என்றும் இந்த நாடுகள் வலியுறுத்தின.

ஐ.நா. உறுப்பு நாடுகளில் சுமார் 140 நாடுகள் பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரிக்கின்றன. இதில் உலகளாவிய தெற்கில் உள்ள பெரும்பாலான நாடுகளும், ரஷ்யா, சீனா மற்றும் இந்தியாவும் அடங்கும். ஆனால் 27 ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளில் சில மட்டுமே அவ்வாறு செய்துள்ளன. பெரும்பாலும் முன்னாள் கம்யூனிச நாடுகள், அதே போல் ஸ்வீடன் மற்றும் சைப்ரஸ் ஆகும்.

நவம்பர் 2012 இல், ஐ.நா. பொதுச் சபை பாலஸ்தீனத்தை நடைமுறை அரசாக அங்கீகரித்தது, ஐ.நா.வில் அதன் அந்தஸ்தை “நிறுவனம்” என்பதிலிருந்து “உறுப்பினர் அல்லாத நாடு” என்று உயர்த்தியமை குறப்பிடத்தக்கது.







# விபுலானந்தாவின் பவளவிழா நடைபவனி ஏற்பாடுகள் துரிதம்!

( வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு விபுலாந்த மத்திய கல்லூரியின் பவளவிழா நடைபவனிக்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

அதற்கான பழைய மாணவ அணிகளின் பிரதிநிதிகளுடனான தொடர் கலந்துரையாடல் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த மாபெரும் நடை பவனி எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி சனிக்கிழமை வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது.

பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் அதிபர் ம.சுந்தரராஜன், பழைய மாணவர் சங்கத்தின் ஆலோசகர் வி.ரி. சகாதேவராஜா, பழைய மாணவர் சங்க செயலாளர் எல்.சுலக்ஷன் ஆகியோர் அதற்கான நடைமுறை விதிமுறைகள் ஒழுங்குகள் தொடர்பாக கருத்துக்களை பகிர்ந்தனர்.

விபுலானந்தாவில் கடந்த காலங்களில் கல்விகற்ற பழைய மாணவர்களின் 30 டீயவஉா அணிகள் அலங்கரிக்கப்பட்ட வாகனங்கள் சகிதம் தனித்துவமான



சீருடையுடன் கலந்து கொள்ள ஆர்வத்துடன் ஏற்பாடு செய்து வருகின்றனர் என்பதை கூறினர்.

பவள விழா நடைபவனி செல்லவிருக்கன்ற மார்க்கம் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் அதிதிகள் பிரமுகர்கள் பழைய மாணவர்கள் பங்குபற்றுகின்ற ஒழுங்கு முறை பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

ஏலவே உருவாக்கப்பட்ட அந்தந்த ஆண்டு அணிகளின் ஒன்றியங்கள் அவர்களது சீருடையில் சுதந்திரமாக பங்கேற்கலாம்.

அப்படி இதுவரை அணியாக ஒன்று சேராத பழைய மாணவர்கள் பொதுவான பவளவிழா சீருடையுடன் பங்கேற்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அப்படிப்பட்டவர்கள் அதிபர் அல்லது பழைய மாணவர் சங்கத்தின் செயலாளருடன் உடனடியாக தொடர்பு கொண்டு தங்கள் வரவை உறுதிப்படுத்துவதோடு பொதுவான பவளவிழா சீருடைக்கான பதிவையும் மேற்கொள்ள முடியும் என்று கூறப்பட்டுள்ளது.

75 வருடகால வரலாற்றில் அங்கு கல்வி பயின்ற புலம்பெயர் விபுலானந்தியன்ஸ் மற்றும் நாட்டிலுள்ள விபுலானந்தியன்ஸ் இந்நடைபவனி வெற்றி பெற தமது பங்களிப்பையும் வரவையும் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் கூறப்பட்டுள்ளது.

# ஆண்டிமுனை முத்துமாரியம்மன் ஆடிப்பூரம்

(உடப்பு க.மகாதேவன்)

உடப்பு ஆண்டிமுனை பகுதியில் தென்னந்தோப்பில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த ஆடிப்பூரம் நிகழ்வு நேற்று (28)திங்கட்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதன்போது அம்பாளுக்கு அபிஷேக ஆராதணைகள் இடம்பெற்றன.







# தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் இலவச புலமைப்பரிசில் கருத்தரங்கு








வட மாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படும் இலவச புலமைப்பரிசில் கருத்தரங்கு அண்மையில் வட்டுக்கோட்டை மத்திய வித்தியாலயத்தில் தந்தை செல்வா நற்பணிமன்ற செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம் ஏற்பாட்டில் அதிபர் த .சசிதரன் தலைமையில் நடைபெற்றது.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் ச.ஜெயந்தன், சமுக, சமயப் பணி செயற்பாட்டாளர்களான நா. பால கிருஷ்ணன், ஜெயந்திரகுமார், வி.தயா சீலன், எஸ்.ஜீவேஸ்வரன் ஆகியோர் 'பொற்பணி செம்மல்' விருது வழங்கிக் கௌரவிக்கப்படடனர்.

# மடத்துடி மீனாட்சி அம்மன் ஆலய ஆடிப்பூரம்!





**( வி.ரி.சகாதேவராஜா)**

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் ஆடிப்பூர திரு விழா நேற்று (28) திங்கட்கிழமை நடை பெற்றது .

ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் முன்னிலை யில் ஆலய குரு சிவஸ்ரீ ச.கோவர்த் தன சர்மா வழிகாட்டலில் குரு அகிலன் ஜயாவின் பூஜையுடன் ஆடிப்பூரத் திரு விழா நடைபெற்றது.

அம்மனுக்கு உரிய இந் நன்னாளில் எமது ஆலயத்தில் இரண்டாவது தடவை யாக ஆடிப்பூரம் அனுஷ்டிக்கப்பட்டுள் ளது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர் என்று ஆலய பரிபாலன சபைத் தலைவர் கே.ஜெயசிறில் தெரி வித்தார்.



# கிழக்கு மாகாண சதுரங்க சம்பியன் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி!

(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்க போட்டிகள் திருகோணமலை மெதடிஸ்த மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. இந்த போட்டி யில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவிகள் 20 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் சாம்பியன் பட்டத்தை பெற்று தேசிய மட்ட போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாகாணமட்ட சதுரங்க போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளை தேசிய மட்ட போட்டிகளுக்கு ஊக்கப்படுத்தி கௌரவப்படுத்தும் நோக்கில் மஹ்மூத் மகளிர் கல்லூரி சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்பு நிகழ்வு கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் தலைமையில் சேர் ராஸிக் பரீட் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம், அதிதியாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபீர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சதுரங்க வரலாற்றுச் சாதனை படைத்த மஹ்மூத் மாணவிகள் கல்லூரி முன்றலில் பூ மாலை அணிவிக்கப்பட்டு இசை வாத்தியங்கள் முழங்க சாரணிய முதலுதவி அணிவகுப்பு மரியாதையுடன் அழைத்து வரப்பட்டனர். வெற்றி பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். உடற்கல்வி பாட ஆசிரிய, ஆசிரியைகள் அதிதிகள் முன்னிலையில் கௌரவிக்கப்பட்டனர்.

கிழக்கு மாகாண சதுரங்கப் போட்டிக்காக மாணவிகளை திறன்பட பயிற்றுவித்த உடற்கல்வி பாட ஆசிரியை எம்.ஜ. ரபீக்கா பீவி (தரம் - 08 பகுதித் தலைவி), எம்.ஜ. சாமிலா (தரம் - 09 பகுதித் தலைவி), உடற்கல்வி பாட ஆசிரியர்களான றிஸ்மி மஜீட், எம்.ஆர்.எம். றப்கான், எம்.எம். றிசான், ஆர்.எம். அஸ்மி, எம்.வை.எம்.றகீப், எஸ்.எல்.எம். சுஹ்தான் மற்றும் மாணவிகளை ஊக்கப்படுத்திய பெற்றோர்களுக்கும் பாடசாலை சமூகம் சார்பாக கல்லூரி அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பிரதி, உதவி அதிபர்கள், பொறுப்பாசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பகுதித் தலைவர்கள் ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுச் செயலாளர் நிசாத் ஷெரீப் உட்பட உறுப்பினர்கள், பழைய மாணவிகள் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# ‘பெண்மையைப் போற்றுவோம் - 2025’ நிகழ்வில் 23 பெண்களுக்குக் கௌரவம்

(அபு அலா)

அன்பின் பாதை எண்ணம்போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றம் நடாத்திய “பெண்மையைப் போற்றுவோம் - 2025” எனும் தொனிப் பொருளில் மாபெரும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை (26) திருகோணமலை மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக. தீபகாந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகத் திருகோணமலை மாநகர சபையின் முதலாவது மேயரான க.செல்வராசா கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் மாவட்டத்திலுள்ள 23 பெண்கள் கௌரவிக்கப்பட்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு நோயல் இம்மானுவேல், திருகோணமலை தென்கையிலை ஆதீனம் குரு மகா சந்நிதானம் தவத்திரு அடிகளார், ஸ்ரீசண்முக இல்ல பொறுப்பாளர் செல்வி விமலா நடராஜா, திருகோணமலை பிராந்திய கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுபாங்கி ஜோன்சன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

“மாதர்குலம் மனுக்குலத்தின் மணிமகுடம்” எனும் தலைப்பில் கிழக்கு மாகாண ஆளணி மற்றும் பயிற்சி, பிரதிப் பிரதம செயலாளர் நா.மணிவண்ணன் சிறப்புரையாற்றினார்.

அன்பின் பாதை நிறுவுனர் திருமதி றொசில்டா அன்டன் அவர்களால் பணி தொடர்பான “அவள் ஒரு சகாப்தம்” என்ற காணொளியையும் வெளியிடப்பட்டது.







# மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கல்









(றிபாஸ்)

கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருதில் இடம்பெற்றது.


ஒன்றியத்தின் தவிசாளர் பொறியியலாளர் எம்.எம். நஸீர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்முனை ஸாஹிரா கல்லூரி, அல் மிஸ்பா மகா வித்தியாலயம், அல் பஹ்ரியா மகா வித்தியாலயம், மஹ்மூத் மகளிர் கல்லூரி, மற்றும் சாய்ந்தமருது மல்ஹருஸ் ஸம்ஸ், அல் ஜலால் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளை சேர்ந்த 37 மாணவர்களுக்கு இந்தப் புலமை பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன.

கிழக்கு மாகாண நட்புறவு ஒன்றியத்தின் உறுப்பினர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள கலந்து கொண்டனர்.





# கிளாலி புனித யாகப்பர் ஆலய திருவிழா திருச்சொரூப பவனி



பளை, கிளாலி புனித யாகப்பர் ஆலய நவநாள் திருவிழாவின் இறுதி நாள் திருச்சொரூப பவனி சனிக்கிழமை இடம்பெற்றது.

# கண்ணாடிப்பிட்டி இந்து மயான புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

(த.சுபேசன்)

சாவகச்சேரி நகராட்சி மன்றின் ஆளுகைக்கு உட்பட்ட கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தின் புனரமைப்புப் பணிகள் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நகரசபைத் தவிசாளர் வ.ஶ்ரீபிரகாஸ், உப தவிசாளர் ஞா.கிஷோர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு புனரமைப்பு பணிகளைச் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.





# இந்தியா - அமெரிக்கா இடையிலான போர் ஏவுகணை ஒப்பந்தம் விரைவில்

இந்தியா- அமெரிக்கா இடையே போர் ஏவுகணை ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாக உள்ளது.

இந்த ஒப்பந்தத்திற்கு பின்னர் , 2026ம் ஆண்டு முதல் காலாண்டில் போர் ஏவுகணைகள் இந்தியா வந்தடைய உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பஹல்காமில் பயங்கரவாத தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளுக்கு எதிராக ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைக்கு பின்னர் ஆயுத கொள்முதலில் இந்திய பாதுகாப்பு துறை கவனம் செலுத்தி வருகிறது.

அதன் அடிப்படையில், வானில் நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகள் உள்ளிட்ட ஆயுதங்களை கொள்வனவு செய்ய இந்திய மத்திய அரசு ஆர்வம் காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது, அவசரகால கொள்முதல் திட்டத்தின் கீழ், பாதுகாப்பு அமைச்சகம் அமெரிக்காவில் இருந்து இந்திய விமானப்படைக்கு போர் ஏவுகணைகளை இறக்குமதி செய்ய பேச்சுவார்த்தை நடத்தி வருகின்ற நிலையில் இந்திய விமானப்படையுடனான ஆரம்ப ஒப்பந்தம் 35 மில்லியன் அமெரிக்க டொலர் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இந்த குறித்த ஒப்பந்தம் அவசரகால கொள்முதல் திட்டத்தின் கீழ் விரைவில் மேற்கொள்ளப்பட இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஏமன் நிமிஷா பிரியாவின் மரணதண்டனை இரத்து?

2017 ஆம் ஆண்டு ஏமனில் நடந்த கொலை வழக்கில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட கேரள தாதியர் நிமிஷா பிரியாவின் மரண தண்டனை இரத்து செய்யப்பட்டதாகக் கூறப்படும் கூற்றுக்களை இந்திய வெளிவிவகார அமைச்சு இன்று நிராகரித்துள்ளது.

அதன்படி, நிமிஷா பிரியா வழக்கு தொடர்பாக சில நபர்கள் பகிர்ந்து கொள்ளும் தகவல்கள் தவறானவை என்று வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் கூறியதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஏமன் நாட்டைச் சேர்ந்த தலால் அப்தோ மஹ்தி கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள செவிலியர் நிமிஷா பிரியாவின் மரணதண்டனையை ஏமன் தலைநகர் சனாவில் ஹவுத்தி போராளிகள் இரத்து செய்துள்ளதாக கேரளாவின் இஸ்லாமிய மதத் தலைவர் அபுபக்கர் முஸ்லியாரின் ‘கிராண்ட் முப்தி’ அலுவலகம் திங்கள் கிழமை அறிவித்தது.

இருப்பினும், ஏமன் அரசாங்கத்திடமிருந்து அதிகாரப்பூர்வ எழுத்துப்பூர்வ உறுதிப்படுத்தல் இன்னும் பெறப்படவில்லை என்று அலுவலகம் தெளிவுபடுத்தியுள்ளது.

இந்த நிலையில் இந்திய வெளிவிவகார அமைச்சின் மேற்கண்ட தகவல் வந்துள்ளது.



நிமிஷாவின் மரணதண்டனை முதலில் ஜூலை 16 ஆம் திகதி திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், கிராண்ட் முப்தி முஸ்லியார் ஏமன் அதிகாரிகளிடம் கருணை கோரி நேரடியாக முறையிட்டதைத் தொடர்ந்து ஒரு நாள் முன்பு நிறுத்தப்பட்டது.

கேரளாவின் பாலக்காட்டை சேர்ந்தவர் நிமிஷா பிரியா (வயது 38). இவர் கடந்த 2008 ஆம் ஆண்டு ஏமன் தலைநகர் சனாவில் உள்ள அரசு மருத்துவமனையில் செவிலியராக பணியில் சேர்ந்தார். கடந்த 2015 இல் அரசு செவிலியர் பணியை இராஜினாமா செய்த நிமிஷா, ஏமனை சேர்ந்த ஜவுளி வியாபாரி தலால் அய்டோ மெஹ்தியுடன் இணைந்து அங்கு புதிய மருத்துவமனையை தொடங்கினார்.

கருத்து வேறுபாடு காரணமாக கடந்த 2017ஆம் ஆண்டு மெஹ்திக்கு, நிமிஷா மயக்க ஊசி மருந்தை செலுத்தினார். இதில் அவர் உயிரிழந்தார். இந்த வழக்கை விசாரித்த சனா நகர நீதிமன்றம் கடந்த 2020 இல் நிமிஷாவுக்கு மரண தண்டனை விதித்தது. இதை ஏமன் உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது.

இதையடுத்து, ஜூலை 16 ஆம் திகதி நிமிஷாவுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படும் என்று ஏமன் அரசு அறிவித்திருந்தது.

சட்டரீதியான முயற்சிகள் தோல்வி அடைந்த நிலையில், மெஹ்தி குடும்பத்தினருக்கு 8.6 கோடி இந்திய ரூபா குருதிப் பணம் அளித்து நிமிஷாவை மீட்க அவரது குடும்பத்தினர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கு தேவையான உதவிகளை மத்திய அரசு வழங்கி வருகிறது. இதனிடையே, நிமிஷாவின் மரண தண்டனையை தள்ளிவைக்குமாறு மத்திய அரசு சார்பில் ஏமன் அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

இந்த விவகாரத்தில் ஏமனின் நட்பு நாடான ஈரான் மூலமாகவும் மத்திய அரசு அழுத்தம் கொடுத்தது.

கேரளாவை சேர்ந்த முஸ்லிம் மத தலைவர் கிராண்ட் முப்தி ஏ.பி. அபுபக்கர் முஸ்லியாரும் மத்தியஸ்தத்தில் ஈடுபட்டதாக தகவல் வெளியானது.

இந்தப் பின்னணியில் நிமிஷா பிரியாவின் மரண தண்டனை தள்ளி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# ஏர் இந்தியாவின் விமானங்களில் சோதனை நடவடிக்கைகள் நிறைவு

## மத்திய அரசு விளக்கம்

அகமதாபாத் விமான விபத்துக்குப் பிறகு ஏர் இந்தியாவின் அனைத்து விமானங்களிலும் கூடுதல் சோதனைகள் மேற்கொள்ளப்பட ஏர் இந்தியாவுக்கு சிவில் விமான போக்குவரத்து இயக்குநரகம் உத்தரவிட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தி.மு.க. மாநிலங்களவை எம்.பி. கனிமொழி நாடாளுமன்றத்தில் 3 கேள்விகளை எழுப்பி இருந்தார்.

1. நாட்டில் உள்ள விமானங்கள் மற்றும் விமான நிலையங்களில் பாதுகாப்பு தணிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கத்துக்கு எந்த அதிகாரமும் இல்லை என்பது உண்மையா?

2. உள்நாட்டு மற்றும் சர்வதேச வழித்தடங்களில் விமானப் பதுகாப்பு தணிக்கைகளில் உள்ள சிக்கல்களை ஆராய உயர் மட்டக் குழுவை அமைக்க அரசாங்கத்துக்கு திட்டம் உள்ளதா?

3. விமான விபத்து தொடர்பான முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்க ஏர் இந்தியாவுக்கு அரசாங்கம் நோட்டீஸ் பிறப்பித்துள்ளதா? உள்நாட்டு மற்றம் சர்வதேச சேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் விமானங்களின் பாதுகாப்பு தணிக்கை அறிக்கைகளை சமர்ப்பிக்க அரசாங்கம் ஏர் இந்தியாவுக்கு உத்தரவிட்டுள்ளதா? என்று கேட்டிருந்தார்.

கனிமொழி என்.வி.என் சோமுவின் இந்த கேள்விகளுக்கு சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் இணை அமைச்சர் முரளிதர் மொஹோல் எழுத்துபூர்வமாக பதில் அளித்துள்ளார். அவர் தனது பதிலில்,

“அனைத்து விமானங்கள் மற்றும் விமான நிலைய ஒபரேட்டர்களுக்குமான விதிகள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து இணக்கமான முறையில் செயல்படுவதற்கான நடைமுறைகளை கண்காணிக்கும் பொறுப்பு சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகத்துக்கு (டி.ஜி.சி.ஏ) உள்ளது.

வழக்கமாக மற்றும் அவ்வப்போது தணிக்கைகளை மேற்கொள்வது, நிகழ்நேர பரிசோதனைகள், இரவு கண்காணிப்பு, பராமரிப்பு நடைமுறைகளை கண்காணிப்பது உள்ளிட்ட நடவடிக்கைகள் பாதுகாப்பு காரணங்களுக்காக அனைத்து விமான ஒபரேட்டர்களிடமும் மேற்கொள்ளப்படுகின்றன. டி.ஜி.சி.ஏ. தனது இணையதளத்தில் வருடாந்திர கண்காணிப்பு திட்டத்தை வெளியிடுகிறது. ஒவ்வொரு இயக்குநரகமும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதிகளில் இத்தகைய சோதனைகளை மேற்கொள்கின்றன.

ஜூன் 12 திகதி அகமதாபாத்தில் ஏர் இந்தியாவின் போயிங் விமானம் விபத்துக்குள்ளானதை அடுத்து, விமான விபத்துக்கு காரணமாக இருந்திருக்கக் கூடிய காரணிகளை கண்டறிவதற்கான விசாரணையை மேற்கொள்ள விமான விபத்து புலனாய்வுப் பணியகத்தின் இயக்குநர் ஜெனரல் 2017 ஆம் ஆண்டு விதி 11ன் கீழ் உத்தரவிட்டார்.

விமானம் விபத்துக்குள்ளானதை அடுத்து, ஏர் இந்தியாவின் அனைத்து விமானங்களிலும் கூடுதல் சோதனைகளை மேற்கொள்ள ஏர் இந்தியாவுக்கு டி.ஜி.சி.ஏ. ஜூன் 13 ஆம் திகதி உத்தரவிட்டார். இதையடுத்து, ஏர் இந்தியாவுக்கு சொந்தமான மொத்தமுள்ள 33 போயிங் விமானங்களில் 31 செயல்பாட்டு விமானங்களில் ஆய்வுகள் மற்றும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில், 8 விமானங்களில் சிறிய அளவில் சரி செய்ய வேண்டிய விஷயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை சரி செய்யப்பட்ட பிறகு விமானங்கள் செயல்பாட்டுக்கு விடுவிக்கப்பட்டன. மீதமுள்ள 2 விமானங்கள் திட்டமிட்ட பராமரிப்பில் உள்ளன.” என தெரிவித்தார்.



# ஈரான் உச்ச தலைவரை கொலை செய்வோம்; இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கை

ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமெனியை படுகொலை செய்யப்போவதாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் கட்ஸ் பகிரங்கமாக மிரட்டல் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை தெற்கு இஸ்ரேலில் உள்ள ராமோன் விமானப்படை தளத்திற்கு விஜயம் செய்தபோது அவர் மேற்கண்ட மிரட்டலை விடுத்தார் என யெடியோத் அஹ்ரோனோத் செய்தித்தாள் தெரிவித்துள்ளது.



ஈரான் மீதான தாக்குதல்களை மீண்டும் தொடங்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நான் இங்கிருந்து சர்வாதிகாரி காமெனிக்கு ஒரு தெளிவான செய்தியை அனுப்ப விரும்புகிறேன். நீங்கள் இஸ்ரேலை தொடர்ந்து அச்சுறுத்தினால், எங்கள் நீண்ட கை மீண்டும் அதிக சக்தியுடன் தெஹ்ரானை அடையும் - இந்த முறை தனிப்பட்ட முறையில் உங்களுக்கும் கூட எனவும் அவர் தெரிவித்தார்.

இஸ்ரேல் அமைச்சரின் இந்த மிரட்டலுக்கு ஈரானிடமிருந்து உடனடியாக எந்த பதிலும் வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# போர் நிறுத்தத் தாமதம் தேவையற்றது; புடினுக்கு இறுதி நேரக்கெடு விடுப்பு

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போரில் அமைதி ஒப்பந்தம் செய்வதற்கான கால அவகாசத்தை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சுருக்கியுள்ளார்.

முதலில் கொடுத்த 50 நாள்களின் காலக்கெடுவை தற்போது 10 முதல் 12 நாள்களுக்குள் முடிவுக்கு வர வேண்டும் என ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நான் புடினிடம் பல முறை பேசியுள்ளேன். அவர் ஒப்பந்தத்திற்கு தயாராக உள்ளார் என நினைத்தேன். ஆனால் பின்னர் கீவ் போன்ற நகரங்களுக்கு ரொக்கெட் வீசி பொது



மக்களை கொல்லுகிறார் என ட்ரம்ப் கூறியுள்ளார்.

பிரிட்டன் பிரதமர் கெயர் ஸ்டார்மருடன் ஸ்காட்லாந்தில் பேசிய ட்ரம்ப், ரஷ்யா தொடர்ந்து முறைகேடான தாக்குதல்களில் ஈடுபடுவது தனது நம்பிக்கையை சீர்குலைத்து விட்டதாகவும், இதனால்தான் காலக்கெடுவை சுருக்க நேர்ந்தது என்றும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு புடினின் போர்நிறுத்த முடிவின் தாமதம் குறித்து பேசியுள்ள ட்ரம்ப், இது தேவையற்ற தாமதம். முடிவு ஏற்கனவே தெரிந்திருந்தால், ஏன் காத்திருக்க வேண்டும்? என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும், அமைதி ஒப்பந்தம் இல்லை என்றால், ரஷ்யாவுடன் வணிகம் செய்பவர்களுக்கு 100 வீத வரி விதிக்கப்படும் எனவும், கூடுதல் தணிக்கை மற்றும் தடைகள் நடைமுறைப்படுத்துவதாகவும் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.




# பாங்கொக்கில் ஐவர் சுட்டுக்கொலை: துப்பாக்கிதாரியும் உயிர்மாய்த்தார்

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கின் பேங்சூ பகுதியிலுள்ள சந்தையொன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில், துப்பாக்கிதாரி என்று சந்தேகிக்கப்படும் நபர் உட்பட ஆறு பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார் என தாய்லாந்து பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவம் நேற்று உள்ளூர் நேரப்படி மதியம் 12:31 அளவில் நேர்ந்துள்ளது.

கொல்லப்பட்டவர்களில் ஐந்து பேர் அந்த சந்தையில் பணிபுரிந்த பாதுகாப்புப் அதிகாரிகள் என்பதை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அதேநேரம், துப்பாக்கிச் சூடு நடத்தியதாக சந்தேகிக்கப்படும் நபரொருவரும் சம்பவ இடத்திலேயே தம்மைதாமே துப்பாக்கியால் சுட்டு உயிரை மாய்த்துக் கொண்டார் என கூறப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுக்கான தெளிவான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

எனினும், தாய்லாந்துக்கும் கம்போடியாவுக்கும் இடையிலான அண்மைய எல்லைப் பதற்றங்களுக்கும் இந்த சம்பவத்துக்கும் ஏதேனும் தொடர்பு உள்ளதா என்பதையும் பொலிஸார் ஆராய்ந்து வருகின்றனர்.

கனடா முரசு
செவ்வாய்க்கிழமை | 29/07/2025

## ஹாமில்டனில் சூடு; ஒருவர் உயிரிழப்பு

கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள ஹாமில்டன் நகரின் டண்டாஸ் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 02▶



# கனடா மீதான வரி விதிப்புக்கு காலக்கெடு நீடிக்கப்படமாட்டாது

## அமெரிக்காவின் அதிரடி அறிவிப்பு

கனடா மீதான வரி விதிப்பு குறித்த அமெரிக்காவின் காலக்கெடு நீடிக்கப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவால் வர்த்தக பங்காளிகள் மீது விதிக்கப்படவுள்ள வரிகளை ஒகஸ்ட் 1 முதல் கடைப்பிடிக்க வேண்டும் என்ற கடைசி நாளில் எந்தவித மாற்றமுமோ நீடிப்புமோ இல்லை என அமெரிக்க வர்த்தக செயலாளர் ஹோவர்ட் லட்னிக் தெரிவித்துள்ளார்.

எந்த நீட்டிப்பும் இல்லை, மேலதிக சலுகைகளும் இல்லை. ஒகஸ்ட் 1 அன்று வரிகள் நிச்சயமாக அமுலுக்கு வரும். சுங்கவரி வசூலிக்கத் தொடங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். 04▶

# வாடகைக்கு குடியிருப்போர் தொடர்பில் நடைமுறைக்கு வரும் புதிய விதிமுறை

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதல் ஒன்ராறியோவில் வாடகைக்கு குடியிருப்போருக்கு ஆதரவாக புதிய விதி நடைமுறைக்கு வரவுள்ளது.

வாடகையை உயர்த்துவதற்காக வீட்டு உரிமையாளர்கள் வாடகைக்கு குடியிருப்போரை புனரமைப்பு என்ற பெயரில் வெளியேற்றுவது வழக்கமான விடயமாக உள்ளது.

இவ்வாறு வாடகைக்கு குடியிருப்போரை வெளியேற்றுவதை நடைமுறைக்கு வரவுள்ள புதிய சட்டம் தடுக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, புனரமைப்புக்காக குடியிருப்பாளர்களை வெளியேற்ற முன்னர் வீட்டு உரிமையாளர்கள் இனிமேல் உரிய அனுமதியை பெற வேண்டும்.



இதன்படி, புனரமைப்புக்கு பின்னர், குடியிருப்பாளர்கள் முன்னர் செலுத்திய அதே வாடகை தொகைக்கு மீண்டும் வீட்டை பெற்றுக்கொள்ள அவர்களுக்கு உரிமை உண்டு.

அவ்வாறு இல்லையெனில், புதிய வீடுகளை வாடகைக்கு பெற அவர்களுக்கு உதவி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# 60 மில்லியன் டொலர் வென்ற அதிர்ஷ்டசாலி இளைஞர்

கனடாவில் 26 வயதான நபர் ஒருவர் லொத்தர் சீட்டிலுப்பு மூலம் 60 மில்லியன் டொலர் பணப் பரிசு வென்றுள்ளார்.

டொராண்டோவில் வசிக்கும் 26 வயதான மென்பொருள் தொழில்நுட்ப பணியாளர் போசெங் மேய் என்பவரே இவ்வாறு பணப் பரிசு வென்றுள்ளார்.

பரிசு வென்றமை குறித்து லொத்தர் சீட்டு நிறுவனம் மேற்கொண்ட அழைப்பினை குறித்த இளைஞர் நம்பவில்லை எனவும் பின்னர் அந்த அழைப்பு நிறுவனத்திடமிருந்து வந்தது என்பதை உறுதி செய்து கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

என் கைகள், கால்கள் எல்லாம் வியர்த்து, வறண்டு போனது எனவும் இந்த உண்மையை ஏற்றுக்கொள்வதற்கு மனம் தயாராக இருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெற்றோருக்கு நல்லதொரு வாழ்வினை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.




## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


ஹாமில்டன் காவல்துறையின் கொலை விசாரணை பிரிவு விசாரணையை முன்னெடுத்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


இந்த சம்பவம் கவர்னர்ஸ் வீதி எண் 77ல், ஒகில்வி தெருவின் மேற்கில் உள்ள பகுதியில் இடம்பெற்றுள்ளது.


சம்பவ இடத்திற்கு விரைந்த ஹாமில்டன் அவசர மருத்துவ சேவைகள், 30 வயதிற்குள் உள்ள ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என உறுதிப்படுத்தினர்.

இந்தப்பகுதியில் அடுத்த பல மணி நேரங்களுக்கு கூடுதல் எண்ணிக்கையில் பொலிஸாரின் பிரசன்னம் காணப்படும் எனவும் மக்கள் அதனை கருத்தில் கொள்ளுமாறும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் இருந்தால் பொலிஸாரை தொடர்பு கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.





# கனடாவில் சிறப்பாக நடைபெற்ற சயனைட் நாவல் அறிமுக நிகழ்வு

ஈழத்துக் கவிஞர், எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய 'சயனைட்' நாவலின் அறிமுக விழா கனடாவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வு நேற்று முன்தினம் மாலை நான்கு மணிக்கு கனடாவின் மார்க்கம் நகரில் அமைந்துள்ள கனடிய வர்த்தக சங்க மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

பயங்கரவாதி, நடுகல் போன்ற நாவல்கள் மூலம் உலகத் தமிழர்களின் மனதையும், சிங்கள இலக்கியவாதிகளின் கவனத்தையும் ஈர்த்த எழுத்தாளர் தீபச்செல்வன்.

இந்தநிலையில், அவர் தனது மூன்றாவது நாவலாக 'சயனைட்' நாவலை எழுதியுள்ளார்.

'சயனைட்' என்பது ஈழ விடுதலைப் போராட்டத்தின் ஓர் மதிப்பு மிக்க குறியீடாக, குறியீட்டுப் பொருளாக உலகத் மக்களால் பார்க்கப்பட்டது.

போராளிகள் எதிரியிடம் உயிருடன் அகப்படுவதைத் தவிர்க்கும் நோக்கில், கழுத்தில் சயனைட் குப்பிகளை அணிந்து வந்தனர்.

இது ஈழப்போராளிகளின் தியாகத்தையும் மற்றும் விடுதலைக்கான நம்பிக்கையையும் வெளிப்படுத்திய மாபெரும் அடையாளமாகும்.

நிஜ சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட 'சயனைட்' நாவல், வெளியான இரண்டு மாதங்களுக்குள் மறுபதிப்பையும் கண்டுவிட்டு, வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்த நாவல், சயனைட் அருந்தி வீர மரணம் ஏற்ற தமிழீழ விடுதலைப் புலி போராளிகளுக்கு சமர்ப்பணமாகும் ஒரு உணர்வுப்பூர்வமான படைப்புஎனசுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விரிவுரையாளர் பொன்னையா விவேகானந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அனைத்துலக தமிழர் பேரவையின் தலைவர் நிமால் விநாயகமூர்த்தி, திரைப்பட இயக்குனர் ரஞ்சித் ஜோசப், எழுத்தாளர் காலம் செல்வம் அருளானந்தம், அன்பரசி மற்றும் பிரியா வின்சட் ஆகியோர் உரை நிகழ்த்தியிருந்தனர்.

முதல் பிரதியினை தாய்வீடு பத்திரிகை ஆசிரியர் திலீப்குமார் பெற்றிருந்தார்.

அத்துடன் விழாவில் கவிஞர்கள், மூத்த எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் தமிழ்துறை ஆர்வலர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்று நிகழ்வைச் சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.











# புகலிடக்கோரிக்கையாளர்களுக்கு வழங்கும் நிதி உதவியை நிறுத்துகின்றது கனடா அரசு

கனடாவில் ஹோட்டல்களில் தங்கவைக்கப்பட்டுள்ள புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு வழங்கப் பட்டுவரும் பெடரல் அரசின் நிதி உதவி இந்த ஆண்டு ஓகஸ்ட் 30 ஆம் திகதியுடன் நிறைவடைய உள்ளதாக கனேடிய புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பு அறிவித் துள்ளது.

அதனைத் தொடர்ந்து, இவர்கள் தங்குவதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும் என கூறப்பட்டாலும், இது குறுகிய காலத்தில் நடை முறைக்கு வருவது சாத்தியமற்றதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து துறைசார் நிபுணரான அடயோமா பட்டர்சன் கூறுகையில், "அனைவருக்கும் தங்கும் இடத்தை ஒரே இரவில் ஏற்பாடு செய்வது நடைமுறை அல்ல. இதனால், சிலர் தெருக்களில் அல்லது பாதுகாப்பற்ற இடங்களில் தங்க வேண்டிய கட்டா யத்தில் விழ்வார்கள்." என கவலை வெளியிட்டுள்ளார்.

மேலும், இவ்வாறு பாதுகாப்பற்ற சூழலில் தங்கும் புகலிடக்கோரிக்கை யாளர்கள் உடல்நலக்கேடு மற்றும் உயிரிழப்பிற்கும் ஆளாகக்கூடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள் ளார்.

தற்போது ஹோட்டல்களில் தங் கியுள்ள பலர், நிரந்தர உறைவிடம் கிடைக்கவில்லையென்ற சூழலில், இந்த முடிவால் பாதிக்கப்படும் ஆபத்து அதிகமாக உள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், ஹோட்டல்களில் தங்கவைக்கப்பட்டுள்ள அகதிகளுக்காக மாற்றுத் தீர்வுகளை விரைவில் செயல்படுத்த அரசு நடவ டிக்கை எடுக்க வேண்டியது அவசி யமாகும் என சமூக அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.



## கனடா மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வரிகள் அமலுக்கு வந்த பிறகும், அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ஐரோப்பிய ஒன்றியம் அதிகாரி களுடன் ஸ்கொட்லாந்தில் நடத்திய பேச்சுவார்த்தைகள் தொடரும் எனவும் லட்னிக் தெரிவித்தார்.

ஐரோப்பியர்கள் ஒப்பந்தம் ஒன்றை எதிர்பார்க்கின்றனர் எனவும் இந்த பேச்சுவார்த்தையின் தலைவராக இருப்பவர் ட்ரம்ப் தான். எனவும் பேச்சுவார்த்தை மேசையை நாங்கள் தான் அமைத்தோம் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஓகஸ்ட் 1 வரி திகதிக்கு முன்னதாக ஐந்து நாடுகள் - பிரிட்டன், வியட்நாம், இண்டோனேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் ஜப்பான் -ட்ரம்ப் நிர்வாகத்துடன் ஒப்பந்தங்களை செய்து வைத்துள்ளன.

அமெரிக்கா ஏப்ரல் மாதம் முதல் பெரும்பாலான நாடுகளுக்கு விதித்த 10 வீதம் அடிப்படை வரிக்கு மேலாகவே இந்நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன.

இந்நாடுகள் ஒப்புக்கொண்ட விகி தங்கள், ஒப்பந்தம் செய்யாதவைகளுக்கு அமெரிக்கா திட்டமிட்டிருந்த அதிக அளவிலான வரிகளைவிட குறைவாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக் கது.